1974 சனவரி 30]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: "இப்படிப்பட்ட சங்கடங்கள்" என்று மாண்புமிகு உறுப்பினர் கூறுகிருர். எப்படிப்பட்ட சங்கடங்கள் என்று சொன்னால் நான் பதில் சொல்ல ஏதுவாக இருக்கும்.

கிராமப்புறங்களில் மருத்துவர்கள் பணி

***210.வினு.—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) M.B.,B.S. பட்டம் பெற்ற மருத்துவர்கள் மூன்ருண்டுகளுக்கு கிராமப்புறத்தில் பணியாற்ற வேண்டுமென்ற விதியினை அமுல்படுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) இவ்வினுவிற்கு இடமில்லை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) இவ்வினுவிற்கு இடமில்லை.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவர் அவர்களே, எம்.பி., பி.பிஸ். பட்டம் பெற்ற வுடனே எல்லா டாக்டர்களும் நகர்ப்புறங்களில்தான் வேலை செய்ய விரும்பு கிருர்கள். ஆகவே, நல்ல திறமையான டாக்டர்களை கிராமப்புறங்களில் பெற இயலவில்லை. ஆகவே, எம்.பி., பி.எஸ்., கோர்ஸில் சேர்த்துக்கொள்ளும் நோக் கிலேயே பட்டம் பெற்ற பிறகு கட்டாயமாக அவர்கள் கிராமப்புறங்களில் ஓராண்டு பணியாற்றவேண்டுமென்ற விதியை நம் அரசு விதிக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன். தலைவர் அவர்களே, இப்பொழுது அந்த நிலை இல்லை. எம்.பி., பி.எஸ். தேர்ச்சி பெற்றவர்கள் எல்லோருமே தகுதியான திறமையான படிப்பு பெற்றவர்கள் என்றுதான் கருதவேண்டும். அவர்களில் பல பேர் கிராமங்களுக்கு வரத் தயாராகவே இருக்கிருர்கள். கிராமங்களில் தகுந்த முறையில் மருத்துவசாலைக்கான கட்டடம், வீட்டு வசதிகள் முழு அளவுக்கு ஏற்படச் செய்ய நிதி வசதிகள் இல்லை என்று கூறலாமே தவிர, டாக்டர்கள் வரவில்லை என்று கூற முடியாது.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவர் அவர்களே, கிராமங்களுக்குச் சென்று பணியாற்ற டாக்டர்களுக்கு அங்கு சரியான வசதிகள் செய்து கொடுக்காத காரணத்தால் கிராமங்களில் பணியாற்ற டாக்டர்கள் செல்ல விரும்பவில்லை என்று கூறப்படுகிறதே அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அரசு நிதி நிலை இடம் தரும் அளவுக்குக் கூடியிருப்பு வசதிகள், குடி தண்ணீர் வசதிகள், மற்றும் சில அத்தியாவசியமான வசதிகளுங்கூடச் செய்யப்படுகிறது. ஆனால், எல்லா வசதிகளும் கிடைக்குமா என்று கேட்டால், கிராமத்தை நகரமாக்க முடியாது என்றுதான் கூறவேண்டும்.

திரு. மு. முத்தையா : தலைவர் அவர்களே, அரசாங்க மருத்துவ மனைகளில் பணி புரியும் டாக்டர்கள் தனியாக ஆஸ்பத்திரி வைத்து நடத்துகிறார்களே, அதைத் தடை செய்ய அரசு உத்தரவு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தனியாக ஆஸ்பத்திரி வைத்து நடத்துவதற்கு அரசாங்க மருத்துவர்களுக்கு உரிமை கிடையாது. ஆனால், கன்ஸல்டேஷன் சர்விஸ் என்ற பெயரில் ஆலோசனை வழங்க உரிமை இருக்கிறது. இவ்விரண்டையும் சில இடங்களில் குழப்பிக் கொள்ளுகிறார்கள். சில இடங்களில் அவர்கள் அப்படி நடத்துகிறார்கள் என்று அறியப்பட்டால் வேறு இடங்களுக்கு அவர்கள் மாற்றப்படுகிறார்கள். புகார்கள் விசாரிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கு. காமாட்சி : தலைவர் அவர்களே, பட்டம் பெற்ற மருத்துவர்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஓரளவு பணி புரியவேண்டும் என்று கட்டாயப் படுத்தப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆண்டுகளாக ஒரு டாக்டருக்கு ஆரம்ப சுகாதார நிலையத்திலேதான் முதன் முதல் பணி வழங்க வேண்டும், அல்லது ஆரம்ப சுகாதார நிலையத்தைப் போன்று டிஸ்பென்ஸரியாக இருக்கும் கிராமப்புற மருத்துவ மனைகளில் பணி வழங்கவேண்டும், இப்படி இரண்டு மூன்று ஆண்டுகள் பணியாற்றிய பிறகு தான் தாலுக்கா மருத்துவ மனைக்குச் செல்லவேண்டும் என்ற முறையை அரசு செயல்படுத்தி வருகிறது. சில நேரங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் அந்த டாக்டர்களுக்காக, அவர்கள் இன்ன ஊரில்தான் இருக்கவேண்டும், இன்ன தாலுக்கா மருத்துவ மனையில்தான் இருக்க வேண்டும் என்று கேட்கும் நிலைமை ஏற்படுகிறது. அப்பொழுதுகூட அமைச்சர் என்ற முறையில் இந்தக் காரணத்தால் நான் மறுத்துத்தான் சொல்கிறேன்.

திரு. எ. சுவாமிதாஸ் : இந்த எம்.பி., பி.எஸ். பரீட்சையில் தேர்ந்த வுடன் அடுத்ததாக ஹவுஸ் சர்ஜன்ஸ் கோர்ஸ் ஒரு வருஷம் என்று போட்டிருக் கிறோம். அதிலே சீனியர் ஹவுஸ் சர்ஜன் கோர்ஸ் இரண்டு வருஷம் இருக்

1974 சனவரி 30]

கிறது. அந்த சீனியர் ஹவுஸ் சர்ஜன் கோர்ஸில் ஒரு ஆண்டு படித்து மருத்துவ பள்ளிக்கு அடுத்ததாக கிராமப்புறத்தில் ஒரு ஆண்டு சேவை செய்தால் தான் அதற்குத் தகுதி அடைவார்கள் என்ற நிலையை உருவாக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கிராமப்புறத்தில் பணியாற்றுவதற்கு டாக்டர்கள் கிடைக்கவில்லை என்று சொன்னுல் இப்படியெல்லாம் கட்டாயப் படுத்த வேண்டும். டாக்டர் வேலை பார்ப்பதற்கு தற்போது 500 பேர் வரை பட்டியலில் காத்துக் கொண்டிருக்கிருர்கள். அரசாங்கம் முழு முயற்சி எடுத்துக்கொண்டு 100, 150 பேர்கள்வரை ஒரு ஆண்டுக்குப் புதியதாக—ஏற்கெனவே உள்ளவர்கள் விலகிய இடங்களில் அல்ல--நியூ சர்வீஸ் என்ற முறையில் 150 பேர்களை ஒரு ஆண்டுக்கு அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. ஏற்கெனவே உள்ளவர்களில் பதவி விலக நேர்ந்தவர்கள், விலக்கப்பட்டவர்கள், தாங்களாகவே விடுவித்துக்கொண்டவர்கள் ஆகியோர்களுடைய இடங்களுக்கும் டாக்டர்களை நியமிக்கிருேம். ஆகவே, சீனியர் ஹவுஸ் ஸர்ஜன் என்பது அவர்களாகவே விரும்பி தங்களுடைய பயிற்சியை வளர்த்துக்கொள்வதற்கும் அதிக பயிற்சி பெறுவதற்கும் பெறுகிற ஒரு படிப்பே தவிர, அது கட்டாயம் அல்ல. ஹவுஸ் ஸர்ஜன்ஸி மட்டுந்தான் கட்டாயம். எனவே, கட்டாயம் இல்லாத பயிற்சியில் உள்ள அவர்களை வைத்து கிராமங்களில் பணியாற்றச் சொல்வது, தேர்ச்சி பெறுவதற்குத் துணையாகாது. அது அவசியம் என்று நான் கருதவில்லை.

மருத்துவமனைகளில் மருந்துகள் இருப்பு

*217 திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

நமது மாநிலத்திலுள்ள அரசு மருத்துவ மனைகளில் Lifesaving drugs எப்போதும் இருப்பில் வைத்திருக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மான்புமிகு திரு. க. அன்பழகன் : அன்ருடம் பயன்படுவதற்கும் அவசர கால தேவைகளுக்குமாக உயிர்காக்கும் மருந்துகள் பொதுவாக 3 மாதத்திற்குரியவை மருத்துவமனைகளில் வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இவ்வகை மருந்துகளில் இருப்பு மருத்துவ மனைக்கு மருத்துவமனை வேறுபடும்.

திரு. எம். சுரேந்திரன் : இது போன்ற மருந்துகள் எல்லா மருத்துவமனைகளிலும் இருக்கவேண்டியது மிகவும் அவசியம். அம்மாதிரி இப்பொழுது எல்லா மருத்துவமனைகளிலும் இது போன்ற மருந்துகள் இல்லை, தலைமை மருத்துவ மனைகளில் மாத்திரம் தான் இப்படிப்பட்ட மருந்துகள் வைக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்படுகிறது இது உண்மையா ?